258. த.க

பகுத்தறிவுப் பகலவன்



கலைஞர்

256.பெ.க

டாக்டர் அம்பேத்கர்

எந்தாய் இணையடி போற்றா!
பள்ளர் புலவர்,
தமிழ்க் [illegible] நூலகம்,
[illegible] -639 104,
கரூர் மாவட்டம்.

தலைவர் கலைஞர்

தலைமைக் கழக வெளியீடு :
திராவிட முன்னேற்றக் கழகம்
அண்ணா அறிவாலயம்
சென்னை 600 018

முதற்பதிப்பு 1995

விலை : ரூ. 4/-

அச்சிட்டோர்:
ரவி டிரேடிங் கார்ப்பரேஷன் பிரிண்டிங் பிரஸ்,
183 டாக்டர் நடேசன் சாலை
சென்னை போன் 842816

இந்நூல்

பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் பேரரசன் ராஜராஜசோழன் தான், தான் உருவாக்கிய கோவில்களுக்குள்ளே அமைத்த கல்வெட்டுக் களால் தமிழகத்தின் வரலாற்றுக்குத் தேவையான அடிப்படைகளை அமைத்தான்.

நவீன தமிழகத்தின் பல்வேறு தலைவர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் எழுப்பித்துப் பெருமைப் படுத்தியதோடு பெரியார், அண்ணா, காமராசர், ராஜாஜி, என பல தலைவர்களுக்கும் கல்லாலும், சொல்லாலும், எழுத்தாலும் எழுப்பிய சின்னங்களால் - வரலாற்றின் விடுபட்ட பக்கங்களையும் நிறைவு செய்தார் கலைஞர் அவர்கள்,

சமுதாய எஜமானர்களின் சங்கப்பலகை அம்பேத்கர் பிறந்த மராத்வாடாவிலேயே அவரை அங்கீகரிக்க மறுத்த 1974 - 75 களிலேயே - ஒரு காலத்துப்பழமையாளர்களின் கோட்டையான நெல்லை மாவட்டத்திலேயே அம்பேத்கருக்கு சிலை எடுத்து சிறப்பித்தவர் கலைஞர்.

தலைவர் கலைஞர் அம்பேத்கருக்கு சொல்லால் எடுத்திருக்கும் இந்த நினைவுச் சின்னத்தை பெருமையுடன் படைக்கின்றோம்.

தமிழ்நாடு அறக்கட்டளை
அரிய நூல்
நிலையம்
அண்ணா அறிவாலயம்

என். செல்வேந்தன்
கழக வெளியீட்டுச் செயலர்

டாக்டர் அம்பேத்கர் 104-வது பிறந்த நாள் விழாவில் தலைவர் கலைஞர் உரை!

அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய 104வது ஆண்டு பிறந்தநாள் விழாவினை மயிலைப் பகுதியில் அம்பேத்கர் அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள பாலத்திற்கு அருகில் மிக எழுச்சியோடும், எழிலார்ந்த நிலையிலும் ஏற்பாடு செய்து இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கின்ற அரிய வாய்ப்பினை வழங்கியுள்ள மாவட்டக்கழக நிர்வாகிகள், பகுதிக்கழக, வட்டக் கழக நிர்வாகிகள் பல்வேறு அணிகள் - அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்குச் சரியாகவோ, தவறாகவோ தமிழ்ப் புத்தாண்டு நாளை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஏதோ தமிழ் என்கின்ற பெயரால் ஒரு விழா; அதைத் தவற விடுவானேன் என்பதற்காக; தமிழ்ப்புத்தாண்டு தை முதல் நாள்தான் தொடங்குகிறது என்று நம்முடைய பழம் பெரும் புலவர்கள் எல்லாம் ஆய்வு செய்து கண்டுபிடித்து அறிவித்திருந்தாலும் கூட; தொன்றுதொட்டு நம்முடைய முன்னோர்கள் ஏற்றுக்கொண்ட இதுவரையில் பழகி வருகின்ற ஒரு வழக்கத்தை திடீர் என்று மாற்றுவதற்கு இயலாத காரணத்தால் தை மாதம் முதல் நாளும் தமிழர் திருநாள்தான் - சித்திரை முதல்நாளும் தமிழர் திருநாள்தான் - ஏதோ இரண்டு நாளும் தமிழர் திருநாள்தான் என்று சொல்லப்படுகிற காரணத்தால் அந்த நாளை கொண்டாடுகிற அந்த உணர்வோடு இந்நாளை தமிழ்ப்புத்தாண்டு என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதே நாளில்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு புத்துணர்வு உருவாக வேண்டும் என்பதற்காக அயராது உழைத்த டாக்டர் அம்பேத்கர் மராட்டிய மண்ணிலே பிறந்தார்.

ஏப்ரல் 14ந் தேதி பிறந்த அம்பேத்கர்; அவருடைய பெற்றோருக்கு பதினான்காவது பிள்ளையாகப் பிறந்தார். நல்ல காலம், குடும்பக் கட்டுப்பாடு திட்டம் அப்போது இருந்திருந்தால் ஒரு அம்பேத்கர் நமக்கு கிடைத்திருக்க மாட்டார். பதினான்காவது பிள்ளையாகப் பிறந்த அம்பேத்கர் இன்றைக்கு அனைத்து நாடுகளும் போற்றுகின்ற ஒரு மேதையாக அரசியல் விற்பன்னராக, அரசியல் பேரறிஞராக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய வழிகாட்டியாக, அந்தச் சமுதாயத்தினுடைய மூடிக்கிடந்த கண்களை திறந்த, இந்திய நாட்டில் யாரும் இந்த அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக

போர்க்குணம் கொண்டு, இந்தியா முழுமையாகவும் பாடுபட்ட தில்லை என்று சொல்கின்ற அளவிற்கு உயர்ந்து நின்றார். அந்த அம்பேத்காரின் பிறந்தநாள் விழாவைத்தான் இன்று நாம் இங்கே கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம்.

எனக்கு முன்னால் இங்க பேசியவர்களெல்லாம் அம்பேத்கர் தோன்றாததற்கு முன்பு இந்தச் சமுதாயத்திற்கு இருந்த கேடு பாடுகள், உயர்வு தாழ்வுகள், தீண்டத் தகாதவர்கள் என்று விலக்கி வைக்கப்பட்ட கொடுமை 'தொடாதே' என்று சொல்கின்ற அளவில் இருந்த பயங்கரமான சாதித் திமிர், மதவாதம், ஆண்டவன் பெயரால், புராணங்களின் பெயரால், இதிகாசங்களின் பெயரால், சாத்திர சம்பிரதாயங்களின் பெயரால் இழைக்கப்பட்ட கொடுமைகள், இவைகளைப்பற்றியெல்லாம் விரிவாக எடுத்துச் சொல்லியிருக் கின்றார்கள்.

தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில் 1949 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களால் இந்த அரசியல் இயக்கம் உருவாக்கப்பட்டது என்றாலும்கூட, இதனுடைய அடிப்படை - அடித்தளம் எது என்பதை நான் உங்களுக்கு விரிவாக விளக்க வேண்டிய அவசியம் இல்லை. 1916 ஆம் ஆண்டுக்கு முன்னாலேயே தமிழகத்தில் மக்களை மக்களாக மதிக்க வேண்டும் என்கின்ற அந்த உணர்வும், அதற்காக போராடுகின்ற குணமும், இயக்கமும் தோன்றியது என்பதை வரலாறு நமக்கு மிகத் தெளிவாக கூறிக் கொண்டிருக்கின்றது.

உயர் சாதிக்காரர்கள், தங்களுடைய சாதி உயர்வு ஒன்றையே காரணமாகக் காட்டி அவர்களுக்கு அடுத்த தட்டில் இருக்கின்ற மக்களையெல்லாம் மிகக் கேவலமாக கொடுமையாக நடத்தி அந்த நிலையைத் தகர்த்தெறிய உருவானதுதான் நீதிக்கட்சி. அந்த நீதிக்கட்சியின் முன்னோடிகள், அவர்கள் வழியைப் பின்பற்றி, நீதிக்கட்சியை திராவிட இயக்கமாக ஆக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் பின்பற்றி, இன்றைக்கு நடைபோட்டுக் கொண்டிருக்கிற தி.மு.கழகம் என்று நீங்கள் கணக்கிட்டுப் பார்ப்பீர்களேயானால் ஏறத்தாழ ஒரு எண்பது அல்லது எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இந்த உணர்வு வித்திடப்பட்டாகிவிட்டது.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரோடு கைகுலுக்காத இரட்டைமலை சீனிவாசன் !

லண்டன் மாநகரத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஏற்பாடு செய்த ஒரு விருந்தில் இந்திய நாட்டுத் தலைவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டுத் தலைவர்கள் பல பேர் கலந்து கொண்டார்கள்.

சர்.ஏ. ராமசாமிமுதலியார், இந்திய நாட்டுத் தலைவர்களிலே ஒருவரான ஜெயகர் இவர்களெல்லாம் கலந்து கொண்டார்கள். அப்படிப்பட்ட அந்த மாநாட்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் விருந்துக்கு வந்திருந்தவர்களையெல்லாம் வரவேற்று, அவர்களோடு கைகுலுக்கிக்கொண்டு வருகின்ற நேரத்தில் ஒரு கை அவருக்கு கொடுக்காமல் பின் இழுத்துக்கொண்டது. ஜார்ஜ் திடுக்கிட்டு நின்றார். அந்தக் கைக்குச் சொந்தக்காரர் சொன்னார் என்னை நீங்கள் தொடக்கூடாது என்றார். ஏன்? என்று ஐந்தாம் ஜார்ஜ் கேட்டார். "நான் தீண்டத் தகாதவன் என்று இந்து மதத்தால் புறக்கணிக்கப்பட்டிருப்பவன். பறையன் என்று இழித்துரைக்கப் படுகிறவன். இதோ பாருங்கள் என்னுடைய சட்டையிலேயே அதை எழுதி வைத்திருக்கிறேன்" என்று, தன்னுடைய சட்டையில் மாட்டப்பட்டிருந்த அந்த 'பேட்ஜை' காட்டினார். அந்த பேட்ஜில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் "நான் ஒரு பறையன், தீண்டத்தகாதவன்" என்று எழுதப்பட்டிருந்தது. இரட்டைமலை சீனிவாசன் அப்படிச் சொன்ன பிறகுகூட ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அதை ஏற்றுக்கொள்ளாமல், "நீங்கள் இந்தியாவில் தீண்டத் தகாதவராக இருக்கலாம். எனக்கு அப்படி அல்ல" என்று சொல்லி அவர் கையைப் பிடித்து இழுத்து கையைக் குலுக்கி தன்னுடைய அன்பைக் காட்டி அங்கிருந்து அகன்று சென்றார் என்பது வரலாறு.

ஏ.எஸ்.கே. எழுதிய நூலில்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த தலைவர்களில் ஒருவரான ஏ.எஸ்.கே. அய்யங்கார் டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு குறித்து ஒரு நூல் வெளியிட்டிருக்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் ஏ.எஸ்.கே. என்று அன்போடு அழைக்கப்படுகின்ற அவர் பழுத்த நாத்திகர். முற்போக்குவாதி, தந்தை பெரியாரின் கொள்கைகளை அணுவும் பிறழாமல் அப்படியே தன் அகத்திலே பதியவைத்துக் கொண்டவர். அவர் எழுதிய புத்தகம் "டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையும்" என்ற தலைப்பு அமைந்த புத்தகமாகும். இந்த புத்தகத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உழைக்கின்ற அந்தச் சமுதாயத்துத் தலைவர்களையெல்லாம் குறிப்பிடும்போது, மீனாம்பாள் சிவராஜ், சிவராஜ், எம்.சி.ராஜா, இரட்டை மலை சீனிவாசன் இவர்களுடைய வரிசையில் ஏ.எஸ்.கே. அய்யங்கார், நம்முடைய அம்மையார் சத்தியவாணி முத்துவையும் அந்தப் பட்டியலிலே இணைத்து இந்தப் புத்தகத்திலே எழுதியிருப்பதைப் படித்துப் பார்த்து நான் மிகுந்த பரவசம் அடைந்தேன் அதிலே அவருடைய கருத்து - தாழ்த்தப்பட்டமக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், சாதியால், மதத்தால் அமுக்கப்பட்டிருக்கின்ற மக்கள் உரிமை பெறவேண்டுமேயானால் அவர்களுக்கு பொருளாதாரத்திலே வசதி வாய்ப்பு ஏற்பட்டாக வேண்டும் என்பது முக்கிய கருத்து.

ஆனால் பெரியார் வழியை, அண்ணா வழியைப் பின்பற்று கின்ற நம்முடைய கருத்து என்னவென்றால், அரசியல் பொருளா தாரமெல்லாம் தேவைதான். அது ஒடுக்கப்படக்கூடியது அல்ல என்றாலும், முதலில் சமுதாயத்தில் புரட்சி ஏற்பட வேண்டும். சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட்டால்தான் என்னதான் பொருளா தாரத்தில் வசதி வாய்ப்பு இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியும் என்பது நம்முடைய வாதம்.

இரண்டாவது கருத்து, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள், சாதாரண சாமான்ய மக்கள், உயர் சாதி அல்லாத மக்கள் இவர்க ளெல்லாம் இன்றைக்கு பல கேடுபாடுகளை அனுபவிப்பதற்குக் காரணம் நம்முடைய கருத்து, சமுதாயச் சூழ்நிலை மாற்றப்பட வேண்டும் என்பது. சிலருடைய கருத்து அது கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாகக் கூட இருக்கலாம். அதுவும் குறிப்பாக இந்தப் புத்தகத்தை எழுதிய ஏ.எஸ்.கே. அய்யங்காரின் கருத்தேகூட அதுவாகத்தான் சுட்டிக் காட்டப்படுகிறது. அவர் தன்னுடைய முன்னுரையிலேயே சொல்கிறார். "வறுமையிலிருந்தும், பொருளாதார அடிமையிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெற்றார்கள் என்றால் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கும் அநீதிகள் அடியோடு ஒழியும் என்பதில் எள்ளவு சந்தேகமும் இல்லை" என்று ஏ.எஸ்.கே. அய்யங்கார் குறிப்பிடுகிறார். ஆனால் அவரே எழுதியுள்ள அந்தப் புத்தகத்தில் அடுத்து ஒரு ஐந்தாறு பக்கங்களைப் புரட்டினால் அங்கே சொல்கிறார் - ராம்ஜி சக்பாலுக்கு பதினான்கு குழந்தைகள் பிறந்தார்கள். அம்பேத்கர் பதினான்காவது குழந்தை. அவரின் தாயார் எல்லா நல்ல குணங்களும் படைத்தவராகத் திகழ்ந்தார். அவர் "முர்பார்க்கர்" என்ற தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். பம்பாய் ராஜ்யத்தில் உள்ள தானா ஜில்லாவில் இருந்த பணக்கார குடும்பம் அது. அவர் தகப்பனாரும், ஆறு மாமன்மார்களும், ராணுவத்தில் சுபேதார் மேஜர்களாகப் பணியாற்றியவர்கள். அவர்கள் அனைவருமே கபீர்தாஸ் தத்துவத்தை முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்டவர்கள் என்பதாக அதே ஆசிரியர் ஏ.எஸ்.கே. அவர்கள் தான் இதையும் எழுதுகிறார். பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அம்பேத்கரின் குடும்பத்தினர்.

அம்பேத்கரின் தகப்பனாரே ராணுவத்திலே சுபேதாரராக இருந்தவர். சுபேதார் ராம்ஜி சக்பால், அவரின் தந்தையார் பெயர் - ஆனால் இந்த அம்பேத்கருக்கு நேர்ந்த கதி என்ன? அவருக்குப் பொருளாதாரவசதி இல்லாமல் இல்லை. வாய்ப்புகள் இல்லாமல் இல்லை. அவரின் குடும்பம் பணக்காரக் குடும்பம். அவரின் உறவினர்கள் பணக்காரர்கள். அவரின் தகப்பனாரோ ராணுவத்தில் சுபேதாராக இருந்தவர்.

அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த அம்பேத்கர் தன்னுடைய தகப்பனாரைச் சந்திக்க தன்னுடைய சகோதரரோடு புகைவண்டியில் சென்று இறங்கி தன்னுடைய ஊருக்கு, கிராமத்திற்குச் செல்ல ரயிலடியில் ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு அந்த வண்டியில் ஏறிச்செல்லும் போது, ஆசிரியர் அதை மிக அழகாகக் குறிப்பிடுகிறார், அவர்கள் நல்ல வெள்ளைச் சட்டை போட்டிருந்தார்கள் என்று. அப்படி வண்டியில் போகும்போது இடையில் "நீங்கள் யாரப்பா?" என்று வண்டிக்காரன் கேட்டான். இன்னார் என்று சொன்ன வுடன் வண்டிக்காரன் வண்டியை அப்படியே குடை கவிழ்த்தான். அவ்வளவு சாதி ஆணவம் சாதி உணர்வு அவனுக்கு. உடனே அம்பேத்கரும், அவரின் சகோதரரும் வண்டியிலிருந்து கீழே உருண்டார்கள். நீங்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். சமுதாயத்தில் மாற்றம் தேவையா என்பதற்கு இந்த புத்தகத்தில் முன்னுரையும், அதே ஆசிரியர் எழுதியுள்ள இந்த நிகழ்ச்சியும் உங்களுக்க சரியான பதிலை அளிக்கும்.

பொருளாதாரத்தில் மாற்றம் இருந்தால் மாத்திரம் போதும் என்றால், அம்பேத்கர் என்ன காரணத்திற்காக வண்டியிலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டார்? மேல் ஜாதிக்காரன் வண்டி ஓட்டு கிறான். தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறந்தவர்கள் அதில் ஏறக்கூடாது என்று கீழே தள்ளிவிடுகிறான்.

ஒரே ரத்தம் படத்தில்

இதைத்தான் நான் எழுதிய ஒரே ரத்தம் படத்தில் ஒரு காட்சி யாக வைத்தேன். அதில் மு.க.ஸ்டாலின் அந்த சிறுவனாக வருவான். நம்முடைய நடிகவேள் ராதாவின் மகன், தம்பி ராதாரவி வண்டிக் காரனாக வருவார். அதாவது சாதி உணர்வு படைத்த வண்டிக் காரனாக வருவார். அவர் தாழ்த்தப்பட்ட சமூக மாணவனை உருவகப்படுத்துகின்ற மு.க. ஸ்டாலினை வண்டியிலிருந்து தள்ளி விடுவார். கீழ் சாதிக்காரர் வண்டியில் ஏறலாமா என்று இதை நான் ஒரே ரத்தம் படத்தில் அமைத்திருந்தேன். நீங்கள் பார்த் திருக்கக்கூடும்.

இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், பொருளாதார ஏற்றத்தாழ்வு மாத்திரம் காரணம் அல்ல. அதைவிட ஆழமாக சமுதாயத்திலே படிந்திருக்கிற சம்பிரதாய முறைப்படி, புராண ரீதியாக, கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் அழுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற மக்களை விடுவிக்க அம்பேத்கர் கடைசி யாக எடுத்த ஆயுதம், அவர்களுக்கு அரசியல் அதிகாரம் வேண்டும் என்பதாகும்.

எவ்வளவு இழிநிலை இந்த சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்த பிறகு, அவர்களுக்கு தனித் தொகுதி வேண்டும் என்று உத்தமர் காந்தியடிகளோடு போராடிய பிறகு அம்பேத்கர் எடுத்த நிலை அரசியல் அதிகாரம் வேண்டும் என்பதாகும். ஆனால், அய்யாவும், அண்ணாவும் திராவிட இயக்கமும் எடுத்த நிலை சமுதாயத்திலே அவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டாக வேண்டும் என்பதாகும். (பலத்த கை தட்டல்)

அம்பேத்கர் பள்ளியில் பயிலும்போது, எல்லா மாணவர் களுக்கும் தெரியாத ஒரு விடையை அம்பேத்கரிடத்தில் கேட்ட போது, அவர் தெரியும் என்று சொன்ன காரணத்தால் நீயே வந்து கரும் பலகையில் எழுதிக்காட்டு என்று ஆசிரியர் சொன்னார். அவர் போய் எழுதிக் காட்டினார் என்று அம்பேத்கரின் அறிவாற்றலுக்கு உதாரணமாக அதைச் சொன்னார். ஆனால் இன்னொன்றை அவசரத்தில் விட்டுவிட்டார் என்று கருதுகிறேன். அது என்ன தெரியுமா? அம்பேத்கர் அதை எழுதிக்காட்ட கரும்பலகைக்கு பக்கத்தில் சென்று கொண்டிருக்கிறார். அப்போது வகுப்பறையில் இருந்த எல்லா மாணவர்களும் கூச்சல் போட்டுக் கொண்டு கரும்பலகையை நோக்கி ஓடுகிறார்கள். அம்பேத்கர் திகைத்து நிற்கிறார். ஆசிரியரும் திகைத்து நிற்கிறார். அப்படி ஓடியவர்கள் அந்த கரும்பலகைக்குப் பின்னால் இருந்த அவர்களின் டிபன் கேரியர்களையெல்லாம் எடுத்துக் கொண்டு ஓடுகிறார்கள். "ஏனப்பா அதையெல்லாம் எடுத்துக் கொண்டு ஓடுகிறார்கள்?" என்று கேட்டபோது "பறையன் வருகிறான். அவனுடைய காற்று படக்கூடாது என்பதற்காக எடுத்துக்கொண்டு போகிறோம்" என்று அந்த மாணவர்கள் சொன்னார்கள்.

சாத்திர சம்பிரதாயங்களைக் கிழித்தெறிய புறப்பட்ட இயக்கம்

பொருளாதாரத் துறையிலே மிக கீழான நிலையிலே இருந்தவர் அல்ல அம்பேத்கர். ராணுவ அதிகாரி வீட்டில் பிறந்தவர்தான். ஆனாலும்கூட, சமுதாயத்திலே இருந்த இழிவு, அம்பேத்கர் கரும் பலகையின் பக்கத்தில் சென்றால் அங்கிருக்கிற டிபன் கேரியரில் தீட்டுப்பட்டு அதைத் தொடுகின்ற உயர்சாதிக்காரர்கள் எல்லாம் தீட்டாகிவிடுவார்கள். அது பெரிய பாவம். அது பகவானுக்கு விரோதம். சாதிக்கு விரோதம். மதத்திற்கு விரோதம் என்று எழுதப்பட்டிருந்த அந்த சாஸ்திர சம்பிரதாயங்களையெல்லாம் கிழித்தெறிய புறப்பட்டதுதான் தந்தை பெரியாரின் சுய மரியாதை இயக்கம். இன்றைக்கு உங்கள் மத்தியில் பணியாற்றிக் கொண்டி ருக்கிற திராவிட இயக்கமமாம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. (பலத்த கைதட்டல்)

எனவே சமுதாய ரீதியாக புரட்சி செய்த இயக்கத்தின் தூதுவர்கள்தான் இன்றைக்கு உங்களிடத்திலே அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், ஒரு மறுமலர்ச்சியை - புரட்சியை ஏற்படுத்த பணியாற்றிக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தவர்! தனிப்பட்ட யாருடைய நன்றியையோ அந்த உணர்வுகளையோ எதிர்பார்த்து, சமுதாயக்கடமைகளை ஆற்றக்கூடாது என்ற அந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் பாபா சாகிப் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் தன்னுடைய பொது வாழ்க்கையைத் தொடங்கினார்.

அவருடைய இளமைப்பருவத்திலேயே சாதிவெறி, அதனுடைய கொடிய நஞ்சு - அதன் காரணமாக பாதிக்கப்படுகின்ற இந்திய நாட்டு மக்கள் தொகையில் ஐந்து சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையினர்; அவர்களுக்காக போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்று அவர் பாடுபட்டார்.

அம்பேத்கருக்கு முன்பு பல மகான்கள் இருந்திருக்கக்கூடும். அவர்களெல்லாம் தீண்டாமையை எதிர்த்துப் பேசியிருக்கக் கூடும். சாதிகள் ஒழிய வேண்டும் என்று எடுத்துக் கூறியிருக்கக் கூடும். இங்கே தமிழகத்திலேகூட, பெரியாருக்கு முன்பு பல பேர் சாதி ஒழிய வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள். வடலூர் ராமலிங்க அடிகள் பேசியிருக்கிறார்; எழுதியிருக்கிறார். அதைப்போல சுப்பிரமணிய பாரதியார் எழுதியிருக்கிறார் - "சாதிகள் இல்லையடி பாப்பா". என்று பாப்பாவின் வயதுக்கே அந்த அறிவுரையை அவர் சொல்ல ஆரம்பித்தார். எனினும் அதை ஒரு இயக்கமாகக் கண்ட பெருமை தந்தை பெரியாருக்குத்தான் உண்டு.

பெரியாரும்
அம்பேத்கரும்

அதைப்போல இந்தியாவின் வடபுலப்பகுதியில் சாதி மத வேறுபாடுகள் களையப்படவேண்டும் என்று மகான்கள், ஞானிகள் இவர்களெல்லாம் பாடியது உண்டு. பேசியது உண்டு. ஆனால் அதை ஒரு இயக்கமாக நடத்த யாரும் முன்வரவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை அவர்களுக்கு. இங்கே கூட பதினெட்டு சித்தர்கள் இருந்தார்கள். அந்தக் காலத்தில் நிலவிய பழக்கம் காரணமாக அவர்கள் பாடிவிட்டார்கள்.

"பறச்சியாவதேதடா
பணத்தியாவதேதடா
இறைச்சிதோல் எலும்பிலே
இலக்கமிட்டிருக்குதோ"

என்று சாதியை அன்றைக்கே ஒழிக்க வேண்டும் என்று அறைகூவல் விட்டுப் பாடிய பதினெட்டு சித்தர்கள் தமிழகத்திலே இருந்தார்கள். ஆனால் அவர்கள்கூட ஒரு இயக்கம் காணவில்லை. இங்கேதான் தந்தை பெரியார் ஒரு இயக்கம் கண்டு, சாதியை ஒழிப்பேன் என்று சூளுரை மேற்கொண்டு போர்க்கோலம் பூண்டார். அதனால்தான் அடிக்கடி எண்ணிக்கொள்வேன் - வடக்கே தாடியில்லாத பெரியாராக அம்பேத்கரும், தெற்கே தாடியுள்ள அம்பேத்கராக பெரியாரும் திகழ்ந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட இருபெரும் தலைவர்களால் இந்தச் சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியை நான் நன்றி உணர்வோடு அவர்கள் இன்றைக்கு இல்லாவிட்டாலும் - நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிறார்கள் என்ற உணர்வோடு போற்ற - அவர்கள் வழி நடக்க - சூளுரைமேற்கொள்கிற நாளாகத்தான் இந்தப் பிறந்தநாள் விழாவை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மராட்டிய மாநிலத்தில்
ஒரு கொடுமையான நிகழ்ச்சி

1926ஆம் ஆண்டு. அம்பேத்கர் பிறந்த அந்த மராட்டிய மாநிலத்தில் நடைபெற்ற கொடுமையான நிகழ்ச்சி என்ன தெரியுமா? அங்கே ஒரு நகராட்சி மன்றத்திற்கு உள்ளடங்கிய ஒரு பெரிய குளம். அநதக் குளத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த யாரும் இறங்கித் தண்ணீர் குடிக்கக் கூடாது. இதை அம்பேத்கரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர் அதை எதிர்த்து, ஒரு மாநாடு கூட்டினார். அந்த மாநாட்டில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் குழுமினார்கள். ஒரு சில உயர் சாதிக்காரர்கள்கூட இந்த மாநாட்டில் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டு அம்பேத்கரின் கருத்தை ஆதரித்துப் பேசினார்கள். ஆனால் பெருவாரியான உயர் சாதிக்காரர்கள் அந்த மாநாட்டை எதிர்த்தார்கள். எனினும் வீரமுடன், தீரமுடன் டாக்டர் அம்பேத்கர் அந்த மாநாட்டை நடத்தி முடித்தார். மாநாட்டிற்குப் பிறகு, குளத்திலே எல்லோரும் இறங்கலாம் என்று உயர் சாதிக்காரர்கள் ஒரு சமரச உடன் பாட்டிற்கு வந்தார்கள். ஆனால் அம்பேத்கர் அந்த ஊரை விட்டுப் போன பிறகு அந்த உரிமையைத் தர மறுத்து விட்டார்கள். மறுத்தது மாத்திரம் அல்ல. எல்லோரும் குளத்திலே இறங்க உரிமை உண்டு என்று நகராட்சி மன்றத்தில் போட்ட தீர்மானத்தை 27ஆம் ஆண்டு திருத்தி ரத்து செய்து விட்டார்கள்.

அதற்குப்பிறகு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டி, ஒரு பெரும் சத்தியாக்கிரகத்திலே டாக்டர் அம்பேத்கர் ஈடுபட்டார் என்றால், குளத்திலே இருக்கிற தண்ணீரை எடுத்து

குடிப்பதற்குக்கூட உரிமையில்லாத ஒரு காலம் 26ஆம் ஆண்டு இருந்திருக்கிறது. நான் இரண்டு வயதுப் பையனாக இருந்தபோது இருந்திருக்கிறது. அந்தக் கொடுமை முற்றாக நீங்கிவிட்டதா? அறவே அகற்றப்பட்டுவிட்டதா என்றால் இல்லை! நான் முதலிலே சொன்னதைப்போல ஆங்காங்கு தலைகாட்டிக் கொண்டிருக்கின்றது. அதைத்தான் மத்திய அமைச்சர் அருணாசலத்திற்கு ஏற்பட்ட நிலைமையோடு இங்கே ஒப்பிட்டுக் காட்டினார்கள். அப்படி ஆங்காங்கு தலைகாட்டுகிறது.

பொது இடங்களில் தண்ணீர் எடுக்க அனுமதியளித்த ஆணை

1924ஆம் ஆண்டு நான் முதலிலே குறிப்பிட்டேனே இரட்டை மலைசீனிவாசன், சட்டமன்றத்தில் அன்றைக்கு அவரின் வலியுறுத் தலின்படி ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அன்றைக்கிருந்த வெள்ளைக்காரர்களின் அரசாங்கத்தில் - நீதிக் கட்சியின் இரட்டை ஆட்சி காலத்தில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அது என்ன ஆணை தெரியுமா? இனிமேல் சகல மக்களும் நடமாடுகின்ற தெருக்களில், சகல மக்களும் தண்ணீர் எடுக்கின்ற குளங்களில், கிணற்றோரங்களில் தாழ்த்தப்பட்ட மக்களும் அனுமதிக்கப்படலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்படியானால் எவ்வளவு அநீதி அதற்கு முன்பு இருந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நீதிக்கட்சி காலத்தில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் துணைவியார் வலியுறுத்தி, அதை இரட்டைமலை சீனிவாசன் அன்றைக்கிருந்த அரசுக்கு எடுத்துச்சொல்லி, அன்றிருந்த அரசு ஆணையாக பிறப்பிக்கிறது. அதில் - இனிமேல் தாழ்த்தப்பட்ட மக்கள் பொது இடங்களில் நடமாடலாம். பொது இடங்களில் அவர்கள் கிணற்றைப்பயன்படுத்தலாம். குளத்தைப் பயன்படுத் தலாம் என்கின்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்படுகிறது என்றால் அதற்கு முன்பு எவ்வளவு கேடுகெட்ட நிலை இருந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மனுநீதியை அடிப்படையாகக் கொண்ட நீதிக்கதை

நான் ஒரு ஆங்கிலப் புத்தகத்தை படிக்க நேர்ந்தது. அதில் ரஷ்ய நாட்டிலிருந்து ஒரு எழுத்தாளர், கிழக்கு ஆசிய நாடுகளில் அந்தக் காலத்தில் எப்படி நீதி நூல்களெல்லாம், நீதிக் கதைகளெல் லாம் இருந்தன என்பதை ஆராய வருகிறார். ஆராய்ந்து இந்தியாவில் உள்ள ஒரு நீதிக்கதையை அவர் கண்டெடுக்கிறார். மனுவின் நீதியை அடிப்படையாகக் கொண்ட நீதிக் கதை அது. என்ன கதை தெரியுமா?

வட மாநிலத்தில் ஒரு பகுதியில் பஞ்சம். உழவர்களெல்லாம் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஊர் மக்கள் கவலை தோய்ந்த முகத்தோடு இருக்கிறார்கள். அந்த நேரத்தில் ஒரு வட்டிக் கடைக் காரனிடத்தில் கடன் வாங்குகிறார்கள். அவனிடத்திலே நாமும் கடன் வாங்குவோம் என்று ஒரு தகப்பனும், மகனும் சென்று கடன் வாங்குகிறார்கள் ஆனால், அவர்களுக்குத் தருகிற கடனுக்கு அதிகவட்டி. அதே கடன் தொகை பக்கத்தில் இன்னொருவனுக்கு தரப்படுகிறது. அதற்குக் குறைந்த வட்டி. இதை ஏன் என்று கேட்டபோது, அது அப்படித்தான் என்கிறான் வட்டிக்கடைக் காரன். நீ அதிக வட்டி கொடுக்க வேண்டும் அவர்கள் குறைந்த வட்டி கொடுத்தால் போதுமானது என்கிறான். இது அநியாயமாக இருக்கிறது என்று தகப்பனும், மகனும் மன்னனிடத்திலே செல்கிறார்கள்.

மன்னரைச் சந்திக்கப் போகும்போது, மாளிகைக்கு வெளியே பல கூண்டுகளில் மனிதர்களை போட்டு அடைத்து, உதைத்து சித்திரவதை செய்து கொண்டிருக்கிறார்கள். இது என்ன என்று கேட்கிறார்கள். அப்போது அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள், இவர்களெல்லாம் சட்டத்துக்கு விரோதமாக நடந்து கொண்டவர்கள். மன்னரின் ஆணையை மதிக்காதவர்கள். எனவே அவர்களுக்கு இந்த சித்திரவதை என்று சொல்கிறார்கள்.

அப்போது தகப்பனும் மகனும் பேசிக் கொள்கிறார்கள். அப்படியானால் நம்மிடத்திலே பாரபட்சமாக அவர்களிடம் குறைந்த வட்டியும், நம்மிடம் அதிக வட்டியும் வாங்குகிறானே, அவனுக்கும் நிச்சயமாக இது போன்று மன்னர் தண்டனை கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு உள்ளே செல்கிறார்கள். மன்னனிடத்திலே விஷயத்தைச் சொல்கிறார்கள். அதற்கு மன்னர் நீ அதிக வட்டியை கொடுத்துதான் ஆகவேண்டும் என்று சொல்லுகிறார். அது மாத்திரம் அல்ல. உன்னுடைய விளைச்சலில் வருகின்ற இன்னொரு பங்கை நீ இந்த மன்னனுக்கு செலுத்தியாக வேண்டும். என்கிறான். "ஒட்டக கூத்தன் பாட்டுக்கு, இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதைப் போல் இவன் போனது நியாயம் கேட்க; ஆனால் அங்கே இரட்டைத் தண்டனை கிடைத்தது.

பிறகு உடனடியாக அவர்கள் அங்கிருந்து ஓடிவந்தார்கள். ஓடிவந்து வேறு எங்கேயோ போனார்கள். அப்பொழுது திடீரென்று அரண்மனை வண்டிகள் வந்தன. அவனுடைய மகனை அந்த கூண்டில் ஏற்றின. ஏற்றிக் கொண்டுபோய் அந்த வட்டிக் கடைக் காரன் வீட்டிலே விட்டு அவனை கூண்டில் போட்டு வீட்டிற்குள் அடைத்தார்கள். அவன் இளைத்து, இளைத்து துரும்பாகப் போகிற அளவிற்கு அங்கே வேலை செய்து கஷ்டப்பட்டு தேய்ந்து தேய்ந்து ஓடாகப் போனான் என்று அந்த நீதிக் கதை முடிகிறது.

எல்லோருக்கும் சமநீதி என்ற நிலை உருவாக உழைத்த அம்பேத்கர் !

இது எதற்காகத் தெரியுமா? ஒரே குறிப்பிட்ட தொகைக்கு அல்லது தானியத்துக்கு, உயர்ந்த சாதிக்காரன் அதிக வட்டி தர வேண்டியதில்லை. தாழ்ந்த சாதிக்காரனாக இருந்தால் அவன் அதிக வட்டி தந்தாக வேண்டும். மன்னனிடத்திலே போய் வழக்குத் தொடுத்தாலும், மன்னர் மேலும் ஒரு தண்டனை கொடுப்பாரே தவிர அது அநியாயம் என்று சொல்ல மாட்டார் என்ற அளவிற்கு இந்தியாவிலே மனு நீதி ஒரு காலத்தில் கடைப் பிடிக்கப்பட்டதை மாற்றி இன்றைக்கு எல்லோருக்கும் சமநீதி என்கிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு டாக்டர் அம்பேத்கர் போன்றவர்கள் தந்த உழைப்பு, எடுத்த முயற்சிதான் காரணம் என்பதை யார்தான் மறுக்க முடியும்?

'வாழ்க' என்றாலும் ஒழிக என்றாலும் மறக்காதிருக்கும் என் பெயர் !

அம்பேத்கர் பெரும் பாடுபட்டு அரசியல் சட்டத்தையே உருவாக்கினார் என்றெல்லாம் சொன்னார்கள். வண்ணை தேவகி பேசும் போதும், தம்பி இளம்வழுதி பேசும் போதும், அம்மையார் சத்தியவாணிமுத்து பேசும் போதும் குறிப்பிட்டார்கள். உங்களுக்காக பாடுபடுகின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகின்ற கலைஞரின் ஆட்சியை கவிழ்த்து விட்டீர்களே. கலைஞரின் கட்சிக்கு வாக்களிக்கமால் போய்விட்டீர்களே என்றெல்லாம் வேதனைப் பட்டார்கள். இன்றல்ல, உங்களுக்குச் சொல்கிறேன். அம்மை யாருக்கு ஞாபகம் இருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குடிசை மாற்று வாரியம் கட்டித் தந்தபோது, ஒரு விழாவிலே அப்போது அமைச்சராக இருந்த அம்மையார் சத்தியவாணிமுத்து பேசினார். அப்போது நான் முதலமைச்சர். என்னை வைத்துக் கொண்டு பேசினார். "இப்படியெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நரிக்குறவர் களுக்கு வீடு கட்டித் தருகிறோமே, அவர்கள் நன்றியுடையவர் களாக இருப்பார்களா? நாளைக்கே சுவற்றில் கருணாநிதி ஒழிக என்று எழுதினாலும் எழுதுவார்கள்" என்று அம்மையார் குறிப் பிட்டார். நான் பேசும்போது சொன்னேன் - "அம்மையார் அவர்களே அதற்காகக் கவலைப் படாதீர்கள். நன்றியை எதிர்ப்பார்த்து நான் இந்தக் காரியத்தைச் செய்யவில்லை" என்று சொல்லிவிட்டுச் சொன்னேன். அவர்கள் "கருணாநிதி ஒழிக என்று எழுதினாலும், வாழ்க என்று எழுதினாலும் என் பெயரை மறக்காமல் எழுது கிறார்களே அதற்காக மகிழ்ச்சி அடையலாம்" என்று குறப்பிட் டேன். (பலத்த கைதட்டல்)

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் நானல்ல. அல்லது நான் தலைமையேற்றிருக்கிற இந்த கழகம் அல்ல. இங்கே புகழ்ந்து பேசினார்களே அம்பேத்கரின் ஆற்றலைப் பற்றி, அறிவைப் பற்றி, அவரின் அறிவாற்றலின் காரணமாக இந்தியாவிற்கே அரசியல் சட்டம் கிடைத்தது என்றெல்லாம் சி.டி. தண்டபாணி போன்றவர்க ளெல்லாம் இங்கே பேசினார்களே அந்த அம்பேத்கர் என்ன ஆனார்?

1950ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை இயற்றித் தருகிறார். அந்த அரசியல் சட்டப்படி நடைபெறுகிற முதல் தேர்தல் 1952ஆம் ஆண்டு தேர்தல் அந்தத் தேர்தலில் அம்பேத்கரும் அவருடைய கட்சிக்காரர்களும் படுதோல்வி அடைகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் - இந்திய நாட்டு மக்கள் காட்டிய நன்றி அப்படி!

அம்பேத்கருக்கு - மக்கள் அளித்திட்ட பரிசு என்ன?

அதற்குப் பிறகு 56ஆம் ஆண்டுகூட, இங்கே சத்தியவாணி முத்து அம்மையார் சொன்னாரே, அவர் இந்துக்களுக்காக அங்கே இருக்கின்ற பிற்போக்குத் தன்மைகளையெல்லாம் அகற்ற, பெண் களுக்கு உரிமை தர, சட்டத்தைக் கொண்டு வந்தார். அதை ஜவகர்லால்நேரு உட்பட யாரும் ஏற்கவில்லை. ஆகவே அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் என்று. அப்படி அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்த பிறகு 56ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் அம்பேத்கர் தோற்க நேரிட்டது. எனவே என்னுடைய மக்கள் வெற்றி அளித்துவிட்டால் பரவாயில்லை. திருந்திவிட்டார்கள் என்று நாம் கருதலாம். தோல்வி அளித்தார்க ளேயானால் இன்னும் திருந்தவில்லை. ஆகவே நமக்கு நிறைய வேலை இருக்கிறது. அவர்களை திருத்துகிற வேலை இருக்கிறது என்று கருதுகிறவன்தான் பெரியாரால் வளர்க்கப்பட்ட, பேரறிஞர் அண்ணாவால் வளர்க்கப்பட்ட கருணாநிதி என்பதும், அவன் தலைமையில் இருக்கின்ற தி.மு. கழகம் என்பதையும் நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. (பலத்த கைதட்டல்) பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப் பட்ட, ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, மக்களுக்காக இன்றைக்கு நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் அவர்கள் நம்மைப் புரிந்து கொள்கின்ற அளவிற்கு அவர்களிடத்தில் இன்னும் நாம் - பணியாற்றவில்லை. அல்லது அவர்களுக்கு புரியவைக்கவில்லை என்பதுதான் அதற்கு பொருள்.

தமிழக மக்களிடம் உருவாகியுள்ள புது எழுச்சி!

இன்றைக்கு நான் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ சுற்றிவிட்டு வந்திருக்கின்றேன். பல மாவட்டத் தலை நகரங்களுக்குச் சென்றேன். என்னுடன் துணைபொதுச் செயலாளர் வீராசாமியும், தலைமைக் கழக செயலாளர் தம்பி துரை முருகனும், சட்டப் பேரவையில் முன்னாள் தலைவர் தமிழ்க்குடி மகனாரும் வந்தார்கள். பல மாவட்டங்களுக்குச் சென்றோம். வழியெல்லாம் ஆயிரக்கணக் கான மக்கள் எங்களை வரவேற்றார்கள். சில பேர் சொல்வார்கள். கருணாநிதி பேசிய கூட்டத்தில் காலிமைதானம் இருந்தது என்று. பாவம், அவர்களெல்லாம் கூட்டம் முடிந்த பிறகு போய் மைதானத் தைப் பார்த்தவர்கள். (பலத்த கைதட்டல்) லட்சக்கணக்கான மக்கள் குழுமினார்கள். நாம் சென்னை மாநகரத்தில் பேரணி நடத்தினோம் என்றால் நேரு பேசிய இடத்தில் நடத்தினோம். இந்திராகாந்தி பேசிய இடத்தில் நடத்தினோம். வி.பி. சிங்கும், ராமராவும் நானும் கலந்து கொண்ட தேசிய முன்னணி விழா நடத்திய இடத்தில் நடத்தினோம், பேரணியை சீரணியில் போய் நடத்தவில்லை. பெரும்பரப்பில் நடத்தினோம். ஆனால் அவர்கள் சொல்கிறார்கள். தி.முகழக கூட்டத்திற்கு, கருணாநிதி பேசுகிற கூட்டத்திற்கு மைதானம் காலியாக இருக்கிறது என்று பேசுகின்றார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று பெற்றுள்ள மனவலிமை !

நான் சொல்ல வந்தது, இங்கே தண்டபாணி குறிப்பிட்டதைப் போல, மக்களிடத்தில் ஒரு புதிய எழுச்சியை காண முடிந்தது. உறங்கிக் கிடந்த மக்கள் அரசியல் விழிப்புணர்வு இல்லாமல் அடங்கிக்கிடந்த மக்கள், எதையோ நம்பி ஏமாந்த மக்கள், தங்களுக்கு புதிய பொற்காலம் வரப்போகிறது என்று எதிர்பார்த்த மக்கள், நாம் ஏமாற்றப்பட்டுவிட்டோம். 91ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்தின் அடிப்படையில் அனுதாபத்திற்கு இடம் தந்து நம்மை ஆள வேண்டியவர்கள் யார் என்பதை தீர்மானிக்கத் தவறிவிட்டோம் என்ற உணர்ச்சியை இன்றைக்கு நாட்டிலே உள்ள பெரும்பாலான மக்கள், அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்றிருக்கிறார்கள் என்றால் உள்ளபடியே திராவிட இயக்கம் அவர்களுக்காக ஒரு எண்பதாண்டு காலம் உழைத்த உழைப்பின் அந்த பெரும்பலனை இன்றைக்கு பெற்றிருக்கிறது. அந்த பலன் ஓட்டு கணக்குப் பலன் அல்ல. நாமும் மனிதர்கள்தான் மண்ணன்று என்ற அந்த மன வலிமையைப் பெற்றிருக்கிறார்களே அதைத்தான் நான் அந்தப் பலன் என்று குறிப்பிடுகிறேன். அதைத்தான் நான் பாராட்டுகின்றேன்.

விரும்புகின்றேன். வெறும் வாக்குகளுக்காக அல்ல. ஆட்சி இன்றைக்கு வரும், நாளைக்குப் போகும். வந்தது. போனது. மறுபடியும் வரலாம். போகலாம். ஆனால் இந்த மக்களுக்காக ஆற்றுகின்ற தொண்டு நிரந்தரமானது. அதை நாம் தொடர்ந்து ஆற்றிக் கொண்டே இருப்போம்.

சவுந்திரபாண்டியனார் 1927ஆம் ஆண்டே பேசினார்.!

1927ஆம் ஆண்டு வாக்கில்டபிள்யூ.பி.ஏ. சவுந்திரபாண்டியன் அன்றைக்கு சட்டமன்ற மேலவையிலே உறுப்பினர். அவர் அங்கே பேசுகிறார். என்ன பேசுகிறார் தெரியுமா? "எனக்கு முன்னால் பேசிய சுவாமி சகஜானந்தா அவர்கள் காங்கிரஸ்காரர். ஒரு தவசியைப் போல தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபடும் தாழ்த்தப்பட்ட மக்களின்பெருந்தலைவர்களில் ஒருவர். அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளையெல்லாம் எடுத்து சொன்னார். அவருடைய உணர்வோடு என்னுடைய உணர்வையும் கலக்கிறேன். அந்த உணர்வைப்புரிந்து கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்" என்று பேசியவர் டபிள்யு. பி.ஏ. சவுந்தரபாண்டியன் ஆவார்! நீதிக்கட்சித் தலைவர்களிலே ஒருவர் சுயமரியாதை இயக்கத்தின் தலைவர்.

தாழ்த்தப்பட்டோரை பேருந்துகளில் ஏற்ற பிறப்பிக்கப்பட்ட ஆணை !

அது மாத்திரமல்ல, அந்த சவுந்திர பாண்டியனார் முகவை மாவட்டத்தில் அன்றைக்கு மாவட்ட ஆட்சிக் கழகத் தலைவராக (District Board Chairman) இருந்தார். அந்த நேரத்தில் ஒரு புகார் வருகிறது. என்ன புகார் தெரியுமா? தீண்டாமை காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களை, ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓடுகிற பேருந்துகளில்தனியார் பஸ் முதலாளிகள் ஏற்றுவதில்லை. தடுக்கிறார்கள் என்ற புகார் வந்தது. அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் சவுந்திரபாண்டியன் ஒரு ஆணை பிறப்பித்தார். அது என்ன ஆணை தெரியுமா? தாழ்த்தப்பட்ட மக்களை அந்த பேருந்துகளில் ஏற்றாவிட்டால் அந்தப் பேருந்துகளுக்கு தரப் பட்டுள்ள பர்மிட் ரத்து செய்யப்படும் என்று ஆணை பிறப்பித்தார். இன்றைக்கு வேண்டுமானால் அது ஆச்சரியமில்லாமல் இருக்கலாம். ஆனால் அன்றைக்கு ஒரு (District Board) தலைவரைக இருந்த சவுந்திர பாண்டியன் எந்த பேருந்தானாலும் அதன் பர்மிட்டை ரத்து செய்வேன் என்று சொல்கின்ற அளவிற்கு உறுதியோடு இருந்த இயக்கம் சுயமரியாதை இயக்கம். திராவிடர் இயக்கம் அதன் வழித்தோன்றலாக இருக்கின்ற தி.மு.கழகம்.

அம்பேத்கருக்குப் பெருமையல்ல; நமக்குக் கிடைத்த பெருமை!

எனவே அந்தக் கழகம் இன்றைக்கு அம்பேத்கரின் 104வது ஆண்டு பிறந்த நாள் விழாவை கொண்டாடுகிறது என்றால், அது எப்படி பொருத்தம் உடையது என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அம்பேத்கர் பெயரால் வடார்க்காடு மாவட்டத் திற்கு, வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டம் என்று பெயர் சூட்டியிருப்பதைச் சொன்னார்கள். அதனால் அம்பேத்காருக்கு பெருமையல்ல. அவருடைய பெயரைச் சூட்டியதால் நமக்குப் பெருமை. அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்களின் முயற்சி யால் வடசென்னையில் 72ஆம் ஆண்டிலேயே கழக ஆட்சியில் அம்பேத்கர் அரசினர் கல்லூரி அமைக்கப்பட்டிருப்பதை செங்கை சிவம் இங்கே குறிப்பிட்டார். அதனால் அம்பேத்கருக்கு பெருமை யில்லை. நமக்குப் பெருமை.

கழக ஆட்சியில் சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்பட்டது. அது நமக்கு பெருமை. அம்பேத்கர் பெருமைக்காக அல்ல, அவர் ஏற்கனவே பெருமை பெற்றவர். அந்த பெருமையை நாம் கொண்டாடுவது நம்முடைய சமுதாய நலத்திற்காக, அந்த உணர்வை எல்லோரும் பெற வேண்டும் என்பதற்காக.

மராத்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்ட நாம் கொடுத்த குரல்!

மராட்டிய மாநிலத்தில் மராத்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் என்று ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி னார்கள். ஆனால் உயர் சாதிக்காரர்கள் - சாதி வெறியர்களின் எதிர்ப்பின் காரணமாக அம்பேத்கர் பெயர் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு வைக்கப்படாமலேயே கிடப்பிலேகிடந்தது. அதை மீண்டும் நினைவுபடுத்தியபோது, அந்தச் செய்தி நமக்கு கிடைத்த வுடன் தி.மு.கழகத்தின் பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தை மராட்டிய முதலமைச்சர் சரத்பவாருக்கு அனுப்பி, அங்கே ஆளுநராக இருக்கின்ற, இங்கே ஏற்கனவே ஆளுநராக இருந்த அலெக்சாண்டர், அவருக்கும் நான் கடிதம் எழுதி அந்தத் தீர்மானத்தை அனுப்பி உடனடியாக அந்த பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை வையுங்கள் என்று கேட்டுக் கொண்டு, நம்முடைய கழக உடன்பிறப்புகள் அத்தனை பேரும் தந்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு லட்சக் கணக்கான தந்திகள் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றிலிருந்து தான். அன்றைக்கு அங்கே சென்றன.

ஆளுநர் அலெக்சாண்டர் எனக்கு "உங்கள் கடிதம் கிடைத்தது. அதை மராட்டிய முதலமைச்சருக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்" என்று கடிதம் எழுதினார். சில நாட்களுக்குப் பிறகு சரத்பவாரும் எனக்கு கடிதம் எழுதினார். "உங்கள் கடிதம் கிடைத்தது. அதுபற்றி நாங்கள் விரைவில் முடிவெடுப்போம்" என்று எழுதினார். அதற்குப் பிறகு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசு ஆணையின் பிரதியையே எனக்கே அனுப்பிவைத்து "உங்களுடைய வேண்டுகோள் கிடைத்தது. நாங்கள் பல்கலைக் கழகத்திற்கு அந்தப் பெயரை வைத்து விட்டோம் என்பதற்கான அரசு ஆணையின் பிரதியை உங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்" என்றும் அனுப்பி வைத்தார்கள். (பலத்த கைதட்டல்)

தலைவர்களின் தொண்டை பெருமைப்படுத்தும் இயக்கம் இது!

இவ்வளவும் எதற்காகச் சொல்கிறேன் என்றால் தாழ்த்தப் பட்ட மக்களைப் பொறுத்தவரையில், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் நம்முடைய சமூக நீதிக்கான போராட்ட எல்லை தமிழ்நாட்டோடு முடிவது இல்லை. இந்தியா முழுமையும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடக்கூடிய, அவர்களின்தலைவர்களுடைய தொண்டை சிறப்பிக்கக் கூடிய, பெருமைப்படுத்தக்கூடிய, அதற்காக வாதாடக்கூடிய அந்த உணர்வு படைத்த இயக்கம் தி.மு.கழகம். அதிலே வெற்றி பெறக்கூடிய இயக்கம் தி.மு.கழகம் என்று நிலை நாட்டுவதற்காகத்தன்.

எனவே இப்படியெல்லாம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தக் கழகத்தை பிளந்துவிட வேண்டும் என்று, உடைத்துவிட வேண்டும் என்று, சிதைத்து விட வேண்டும் என்று யார் யாரோ கனவு கண்டு, யார் யாரோ துரோகிகளாக மாறி, யார் யாரோ பேரம் பேசிக் கொண்டு, இன்றைக்கு வருகிறார்கள் என்றால் அவர்களுக்காக யாரும் கவலைப்படத்தேவையில்லை. நல்ல விழா இங்கே நடைபெறுகிறது. பொல்லாதவர்களைப் பற்றிய பேச்சு தேவையில்லை என்ற காரணத்தால், நல்லவர் அம்பேத்கர் வல்லவர் அம்பேத்கர் வாழ்க வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன்.

எந்தாய் [illegible] நினைவு நூலகம்,
பல்கலைக்கழகம்,
தமிழ்க [illegible] நினைவு நூலகம்,
[illegible] அகம்,
குழித்தலை - 639 104.
[illegible] மாவட்டம்.

தி.மு.க. அரசு
பேராசிரியர் அ.
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

